**குண்டசாலை பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குண்டசாலை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்கள் அடங்கிய நிதிக் கூற்றுக்களுக்கு உரிய உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, குண்டசாலை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய மீதி என 2021 ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது ஆனால் நிர்மாண வேலை செய்யப்பட்டிருக்காத சேதனப் பசளை பொதி செய்யும் மற்றும் களஞ்சியச் செயற்களம் என காட்டப்பட்டுள்ள ரூபா 42,170,000 தொகை மீதியொன்று பிழையான முறையில் கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 18,735,571 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2020 ஆண்டு சேவையை விட்டுச் சென்றுள்ள நபர் ஒருவரின் ரூபா 196,344 இற்கான கடன் மீதியொன்று குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது குண்டசாலை அலுத்வத்தை இணைந்த திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ முன்னோடி செயற்திட்டத்திற்காக கவசிமா இயந்திரத்தின் துணைக் கருவிகள் பொருத்துதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 71,589,329 தொகை மற்றும் ஏனைய முன்னேற்ற வேலைகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 12,000,000 தொகையினை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 2010 ஆண்டில் துணைப் பகிர்வு செய்து ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்த காணிகளில் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த ரூபா 1,033,912 இற்கான உயன்வத்த காணி மற்றும் ரூபா 1,777,845 இற்கான மொரகஹபிடிய காணியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | கடந்த ஆண்டு கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்த வராபிடிய பொது நூலகம் நிர்மாணிக்கும் செயற்திட்ட பெறுமதியாகிய ரூபா 650,000 தொகை மீண்டும் கட்டிடக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான அபிவிருத்தி திட்டங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்த அமுனுகம தேவரவத்த பாதையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் பெறுமதி ரூபா 1,300,000 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் பிழையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | முன்னைய ஆண்டில் சபை கட்டிடத்திற்கு வர்ணம் பூசுவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,900,000 தொகையினை மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மீளாய்வாண்டின் 06 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக நிர்மாண வேலை கோப்புக்களின் படி செலவுகள் ரூபா 5,422,767 தொகை எனினும், மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 7,225,000 தொகை கடன்கொடுத்தோர் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 1,802,233 தொகை கடன்கொடுத்தோர் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | மீளாய்வாண்டின் போது மந்திரிமார் அறை மற்றும் சபை மண்டபம் தயாரித்தல் செலவாகிய ரூபா 3,443,171 தொகையினை மூலதனப்படுத்தாமல் மீண்டுவரும் செலவின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | 2015 – 2017 ஆண்டுகள் தொடர்பாக சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள இரண்டு ஹோட்டல்களிலிருந்து பெற வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 14,753,555 தொகை கணக்கீடு செய்திருக்காததுடன், 2018 முதல் மீளாய்வாண்டு வரை குறிப்பிட்ட அனுமதிப்பத்திரக் கட்டணத்தை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 10 சொத்து விடயங்களின் மீதிகள் மற்றும் 01 பொறுப்பு விடயம் தொடர்புடைய மீதிகள் உரிய அட்டவணைகளின் பதிவேடுகளின் மீதிகளுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 70,302,688 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | வித்தியாசத்தை சரியாக இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளை சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு மூலதன செலவீட்டிற்கான அரசிறை மற்றும் உதவு தொகை மூலம் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 1,415,166,045 தொகை எனினும், நிலையான சொத்துக்களின் மீதி ரூபா 1,416,501,094 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,335,049 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டு இறுதித் தினத்திலுள்ளவாறு சபையின் முற்கொடுப்பனவு மீதியாகிய ரூபா 18,145,527 தொகைக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் ரூபா 18,428,135 தொகை பிழையாக குறுக்குப் பதிவு மூலம் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 58,065,295 09 இற்கான சொத்து மீதிகள் மற்றும் 03 பொறுப்பு மீதிக்ள அவற்றிற்குரிய பௌதீக ரீதியான உளமை, கோப்புக்கள், பதிவேடுக்ள மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை சபை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது. | தகவல்களை கண்டறிந்து ஆவணப்படுத்தி சரியாக அட்டவணைகள் பேணிச்செல்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளுக்குரிய பதிவேடுகள் கோப்புக்கள் மற்றும் அட்டவணைகள் பேணிச் செல்ல வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இன் பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 149 | 02 ஹோட்டல்களிலிருந்து 2015 முதல் 2017 வரையாக காலப் பகுதிக்குரிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 14,753,555 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | வழக்குத் தாக்கல் செய்து எதிர் காலத்தில் அறவீடு செய்யப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட்டு வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1952 இன் 06 இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணை சட்டங்கள்) சட்டம் | | | |
| | முச்சக்கர வண்டி நிறுத்தி வைத்தல் தொடர்பான துணைச்சட்டம் | சபையின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடங்களில் இருந்து 2010 முதல் மீளாய்வாண்டு வரை முச்சக்கர வண்டி நிறுத்தி வைத்தல் கட்டணம் ரூபா 3,686,433 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | கட்டணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் (4) | சபைக்கு சொந்தமான கப் வண்டி 2022 ஜனவரி 20 திகதி திடீரென்று தீப்பற்றுதலுக்கு ஆளாகியிருந்தமையால் அது தொடர்பான விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இரசாயன பகுப்பாய்வு அறிக்கை பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | (ii) நிதிப் பிரமாணம் 394 | காலம் இனங்காண முடியாத வழங்கப்பட்டு பின்னர் மதிப்பளிக்கப்பட்டிருக்காத ரூபா 156,041 இற்கான காசோலைக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அடுத்த வருடம் சரி செய்யப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி, 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 74,705,125 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 181,233,144 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 64,118,347 | 42,692,287 | 34,835,347 | 57,623,127 | 42,815,634 | 33,079,249 | 16,686,937 | 49,766,187 |
| ii. | வாடகை | 20,018,920 | 17,756,548 | 19,186,050 | 2,810,475 | 8,781,620 | 10,039,619 | 14,279,596 | 4,239,977 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 18,574,146 | 7,100,000 | 7,100,000 | 15,321,640 | 5,985,000 | 5,983,999 | 5,983,999 | 15,321,640 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 174,613,776 | 174,613,776 | 86,463,058 | 331,137,124 | 213,435,930 | 213,435,980 | 29,550,426 | 242,986,406 |
| | | 277,325,189 | 242,162,611 | 147,584,455 | 406,892,366 | 271,018,184 | 262,538,847 | 66,500,958 | 312,314,210 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 55,330,880 தொகையாக காணப்பட்டதுடன், ஒரு அலகின் வீதவரி நிலுவை ரூபா 50,000 - ரூபா 100,000 இற்கும் இடைப்பட்ட 12 ஆதனங்களின் கூட்டுத்தொகை ரூபா 795,604 தொகையும், ரூபா 100,000 இற்கு மிகைத்துள்ள 07 ஆதனங்களிலிருந்து ரூபா 18,600,204 தொகையும் அதில் ரூபா 17,007,003 இற்கான 830 அரசாங்க ஆதனங்கிலிருந்து ரூபா 528,565 தொகை காணப்பட்டது. | ஆதனங்களை தடை செய்து அறவிடப்படும் என. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

**(ஆ) கடை வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,810,475 இற்கான நிலுவை கடையறை வாடகை மீதியை அறவீடு செய்தவற்காக பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 159(1) இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அதில் சீல் வைக்கப்பட்ட 03 கடையறைகளிலிருந்து ரூபா 457,390 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | கடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | 2014 ஆண்டின் போது டென்டர் பண்ணப்பட்டு சாட்டப்பட்டிருந்த திகன பல்கரும கட்டிடத்தின் 05 கடையறைகளில் இருந்து ரூபா 2,639,500 தொகைக்கான டென்டர் தொகையொன்று மீளாய்வாண்டு இறுதித் திகதி வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | -மேற்படி- |

**(இ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 6,938,663 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 157,532,539 தொகையாக இருந்தது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் தருவித்துக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்டுள்ள ரூபா 63,000,000 இற்கான 114 அபிவிருத்தி செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்பாடுகள் போதியதாக காணப்படாமையாகும். | திட்டமிடப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | குண்டசாலை பிரதேச சபை மற்றும் பகததும்பர பிரதேச சபை இணைந்து திகன அலுத்வத்த குப்பை நிலையத்தை முன்னேற்றுவதற்காக 2021 ஆண்டில் ரூபா 90 மில்லியன் தொகை பிரதான அமைச்சின் ஊடாக உள்ளுராட்சி ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) கொவ்சினா இயந்திரத்தின் திருத்த வேலைகளுக்காக மிகையாக செலவிடப்பட்டிருந்தமையால் களஞ்சியச் செயற்களம் நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 42.17 மில்லியனிற்கான தொகையில் ரூபா 29.38 மில்லியன் தொகை அதற்காக ஈடுபடுத்துவதற்கு நேரிட்டிருந்தமையால் களஞ்சிய செயற்களம் நிர்மாணித்தல் சபையினால் கைவிடப்பட்டிருந்தது. மீதியான ரூபா 12 மில்லியன் தொகை குப்பை செயற்களத்தின் ஏனைய கருமங்களுக்காக முறைசாரா விதமாக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட இரண்டு செயற்திட்டங்களுக்கும் ஈடுபடுத்தப்பட்டது என. | திட்டமிடப்பட்டவாறு கருமங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| | (ii) செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக மற்றும் சேதனப் பசளை செய்முறையை உரிய முறையில் நிறைவேற்றல் தொடர்பாக சேகரிக்கப்பட்ட உக்கக் கூடிய குப்பைகள் அறைக்கப்பட்ட குப்பைகள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட உரம் நனையாத முறையில் களஞ்சியப்படுத்தல், அறைக்கப்பட்ட குப்பைகள் உரிய நியமங்களின் படி உக்குவதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் உரம் உரிய நியமங்களின் படி களஞ்சியப்படுத்துதல் ஆகிய தேவையான விடயங்களுக்காக நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்த களஞ்சிய செயற்கள கட்டிடம் உரிய முறையில் திட்டமிடப்படாமை மற்றும் உத்தியோகத்தர்களின் | எதிர் காலத்தில் சரியான திட்டமொன்றுடன் செயற்படுவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது என. | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திறமையின்மை ஆகிய காரணங்களினால் திட்டமிடப்பட்டவாறு நிர்மாணிக்க முடியாமல் போனது. | | |
| (iii) | சேதனப் பசளை செயற்களத்திற்காக குப்பைகளில் காணப்படும் மிகை ஈரப்பதனை அகற்றுவதற்காக 2021 ஆண்டு ரூபா 10,287,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரம் கொள்வனவு செய்த நாள் முதல் மீளாய்வாண்டு வரை செயற்படு நிலையில் காணப்படவில்லை. | மின்சாரம் பொருத்துவதில் தாமதம் காரணமாக இருந்தது என. | முறையான பரிசோதனை ஒன்றின் மீது கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | அலுத்வத்த திண்மக் கழிவுப்பொருள் செயற்திட்டத்தில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்திக் மூலம் எரிபொருள் ஒன்று உற்பத்தி செய்யும் முன்னோடிச் செயற்திட்டத்திற்காக 2021 ஜனவரி 28 திகதி சபை தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை மேற்கொண்டு மீளாய்வாண்டு இறுதித் திகதி அளவிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், சபை செயற்திட்ட வளவு தயாரிப்பதற்காக 2021 முதல் 2022 வரை ரூபா 29,782,203 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்தது. எனினும், இந்த இயந்திரம் பொருத்துவதற்கு உடன்படிக்கையினால் சாட்டப்பட்டிருந்த ஒப்பந்தக்காரர் அதனை பொருத்தாத காரணத்தினால் அதற்காக சபையினால் செலுத்தப்பட்டிருந்த செலவு பயனற்ற செலவாக இருந்தது. இது தொடர்பாக ஒப்பந்த நிறுவனத்திற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பலனற்ற செலவொன்றாக இருந்ததென. | குறிப்கோளுக்குரிய கருமங்கள் நிறைவேற்றப்பட வேண்டியதுடன், மேற்பார்வை உத்தியோகத்தர்கள் மேற்பார்வை செய்ய வேண்டியதுடன், வேலைகள் நிறைவேற்றப்படாமை தொடர்பாக ஒப்பந்த வேலை நிறுவனம் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 257,718,123 இற்கான கடன் கொடுத்தோர் மீதியொன்று மற்றும் ரூபா 105,569,537 இற்கான கடன் பட்டோர் மீதியொன்றினை தீர்த்துக்கொள்வதற்கு அல்லது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன் பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்கும் கடன் கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்கும் கடன் கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு சேதனப் பசளை செயற்திட்டத்தின் உர இருப்பினை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியான கணக்கீடு செய்யப்படும் என. | சுரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 4,500,000 தொகைக்கான கப் வண்டியொன்று 2012 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | திருத்த வேலைகளுக்காக பாரிய செலவொன்று மேற்கொள்ள நேரிடுவதனால் அகற்றப்பட்டுள்ளது என. | அகற்றுவதற்கு அல்லது திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திகன பல்கரும கட்டிடத்தின் 12 கடையறைகள் பல வருட காலம் முதல் மூடப்பட்டு காணப்பட்டதுடன், மூடப்பட்ட கடைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது முறையான நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட கடையறைகளை உரித்தாக்குவதற்கு அல்லது முறையான நடைமுறையொன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலஅளவை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வரைபுகள் தயாரிக்கப்பட்டிருந்த 34 ஆதனங்கள் மற்றும் சபையினால் அனுபவித்து வருகின்ற 272 காணிகளை உரித்தாக்கியிருக்கவில்லை. | கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என. | முறைப் பிரகாரம் உரித்தாக்க நடவடிக்கை வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 12 விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் எல்லை வேலிகள் போடப்பட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்தியிருக்காததுடன், அந்தக் காணிகளில் காடுகள் வளர்ந்து கட்டிடங்கள் பராமரிக்கப்படாமல் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | வேலிகள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என. | காணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி குறிக்கோள் சார் கருமங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.5 செயற்திட்டங்கள் மற்றும் செய்பணிகள் அல்லது மூலதன வேலைத் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வங்கிக் கணக்கில் காணப்பட்ட ரூபா 209,433,521 இற்கான மீண்டுவரும் வருமானம் பிரதேச அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | மிகைப் பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளது என. | மிகைப் பணம் அபிவிருத்தி அலுவல்களுக்காக பயன்படுத்த வேண்டும். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கஞ் செய்த போது அவற்றில் 10 பதவிகளுக்கான 21 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 20 மிகைகளும் காணப்பட்டன. | அரசாங்க கொள்கையின் படி ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ள காரணத்தினால் வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்ததெனவும், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டமையால் மிகை ஏற்பட்டது என. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 முதல் மீளாய்வாண்டு வரையான காலப் பகுதியில் இறந்த, சம்பளமின்றிய விடுமுறை பெற்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 03 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடம் ரூபா 572,857 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

**4 கணக்களிப் பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டிருந்த போதிலும் அவற்றை நெருங்குவதற்காக மற்றும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக சுட்டிகள் இனங்கண்டிருந்த போதிலும், அவற்றை செயற்படுத்தியிருக்கவில்லை. | இலக்குகள் மற்றும் சுட்டிகள் குறிப்பிட்ட அளவு இனங்காணப்பட்டுள்ளது என. | இலக்குகள் மற்றும் சுட்டிகளை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். |